இறைக் கட்டளையை நிறைவேற்ற

மவ்லிது அவசியம்

மவ்லித் என்ற அறபு வார்த்தைக்கு பிறப்பிடம் (பிறப்பு) என்று பொருள். நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பிறப்பையும், சிறப்பையும் இறைவன் குர்ஆனிலும் மற்ற வேதங்களிலும் புகழ்வது போலும், இன்னும் இறைவனால் பொருந்திக் கொள்ளப்பட்ட ஸஹாபாப் பெருமக்கள் புகழ்ந்தது போலும் புகழ்வது மவ்லித் ஆகும்.

கியாமத் நாள் வரை நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது மவ்லிது ஓதப்படுகிறது. இன்னும் ஓதப்படும். இதற்குச் சான்று கலீமாவில் லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலுல்லாஹ் என்றும், குர்ஆனில் நான்கு இடங்களில் முஹம்மத் என்றும் ஓரிடத்தில் அஹ்மத் என்றும் உலகம் முழுவதும் இடைவிடாது ஒளிர்ந்து கொண்டிருக்கிறது. அதேபோல், குர்ஆன் ஓதினாலும், பல ஆயத்துக்கள் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சிறப்பை நமக்கு உணர்த்துகின்றன. அல்லாஹ்வும் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் புகழ்ந்து கொண்டிருக்கிறான் என்பதற்கு குர்ஆனே (33:56) சான்றாகும். மவ்லிது ஓதுவது நமக்கு ஆகுமான - நன்மை தரக்கூடிய சுன்னதான செயலாகும்.

நல்லோர்களை நினைவு கூறுமிடத்தில் இறைவனின் ரஹ்மத் இறங்குகிறது என்பதாக நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளியுள்ளார்கள். (நூல் : தைலமீ). எனவே, மவ்லிது ஓதுபவருக்கும், ஓதுமிடத்திற்கும் இறைவனின் ரஹ்மத் இறங்குகிறது.

ஷரீஅத் முறைப்படி மவ்லிது ஓதுவது (சுன்னத் முஅக்கதாவாகும்). எனவே, மவ்லிது ஓதக்கூடாது. ஓதுவது ஷிர்க், குஃப்ர் என்று கூறினால் குர்ஆனையும் (அல்லாஹ்வையும்), ஹதீதையும் (ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும்) மறுத்தவனாவான். மவ்லிது ஓதுவது இறைக் கட்டளைக்கு இணங்க, மாநபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கண்ணியம் செய்வதற்குத்தான். கண்ணியம் செய்ய மறுத்ததால்தான் ஷைத்தான் சொர்க்கத்திலிருந்து வீசப்பட்டான். இன்னும், முஃமீன்களுக்கு பகிரங்க விரோதியானான். அதேபோல், நபிகள்

ாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு, நாம் செய்யும் ண்ணியத்தை (மவ்லிதைத்) தடுத்தால் (மவ்லிதை ஹராம், ஷிர்க் என்று கூறுபவன்) ஷைத்தானின் நண்பனாவான்.

மவ்லிது ஓதக் காரணமே குர்ஆன் ஷரீஃப் தான். ஏனென்றால், நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் புகழ்க் காவியமாகத் திகழ்கிறது குர்ஆன்.

அல்லாஹ்வே புகழும் அண்ணலார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) :

அல்லாஹ்வே குர்ஆனில் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பிறப்பையும் சிறப்பையும் பற்றிக் கூறுகிறான்.

அல்லாஹ் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அனுப்பியதன் மூலம் முஃமீன்களுக்கு நிஃமத் (அருள்) ந்திருக்கிறான். (அல்குர்ஆன் 3:164)

நபியே! உம்மை உலகத்தார் அனைவருக்கும் அருட்கொடையாகவே தவிர அனுப்பவில்லை. (அல்குர்ஆன் 21:107)

நபியே! உங்களின் மகிமையை (கீர்த்தியை) நாம் உயர்த்தியுள்ளோம். (அல்குர்ஆன் 94:04)

நபியே! நிச்சயமாக நீங்கள் மேலான (உயர்ந்த) நற்குணத்தில் இருக்கின்றீர். (அல்குர்ஆன் 68:04)

திட்டமாக நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அழகிய முன்மாதிரியாக இருக்கிறார்கள். (அல்குர்ஆன் 33:21)

நபியே! நிச்சயமாக நீங்கள் அல்லாஹ்வின் பக்கம் அழைப்பவராகவும், ஒளிரும் சூரியனாகவும் இருக்கிறீர்கள். (அல்குர்ஆன் 33:46)

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்றால், தவ்ராத்திலும் இன்ஜீலிலும் அவர்களது பண்புகள் எழுதப்பட்டிருக்கும். (அல்குர்ஆன் 7:157)

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முஃமீன்களின் உயிரைவிடவும் மேலானவர்கள். (அல்குர்ஆன் 33:06)

நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பிறப்பிற்கு முன்பே இறைவன் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மூலம் ஓதிய மவ்லிது:

ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தமது சமூகத்தினரை நோக்கி, இஸ்ராயீலின் சந்ததியினரே! மெய்யாகவே, நான் உங்களிடம் அனுப்பப்பட்ட தூதர், நான் எனக்கு முன் உள்ள தௌராத்தை உண்மைப்படுத்துகிறேன். இன்னும் எனக்குப் பின் அஹ்மத் என்னும் பெயர் கொண்ட ஒரு தூதர் வருவதைப் பற்றியும் உங்களுக்கு நற்செய்தி கூறுகிறேன். (அல்குர்ஆன் 61:06)

முஃமீன்களே! நீங்கள் அல்லாஹ்வையும் அவனது ரசூலையும் ஈமான் கொண்டும், அவர்களுக்கு உதவி புரிந்தும் அவர்களுக்குக் கண்ணியம் செய்தும், அவர்களை (அல்லாஹ் - ரசூலை) காலையிலும், மாலையிலும் துதி (தஸ்பீஹ்) செய்து வாருங்கள். (அல்குர்ஆன் 48:09)

அல்லாஹ்வும் அமரர்களும் ஓதும் மவ்லிது:

அல்லாஹ்வும் அவனது அமரர்களும் நபிகளார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மீது ஸலவாத்து (மவ்லிது) ஓதுகிறார்கள். ஈமான் கொண்டவர்களாக, நீங்களும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்) மீது ஸலவாத்தும் ஸலாமும் சொல்லுங்கள். (அல்குர்ஆன் 33:56)

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உடலிலுள்ள ஒவ்வொரு அங்கத்தையும், இறைவன் தன் அருள் மறையில் பதிவு செய்துள்ளான்:-

நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திருப்பார்வை பற்றி திருமறையில் 53:17 வசனத்திலும், இரு கண்களைப் பற்றி 20 : 131 வசனத்திலும், இதயத்தைப் பற்றி 53:11 வசனத்திலும், திருக்கரங்களைப் பற்றி 48:10 வசனத்திலும், உள்ளத்தைப் பற்றி 02:97, 26:32, 26:194 வசனங்களிலும், திருமுகத்தைப் பற்றி 02:14 வசனத்திலும், நெஞ்சத்தைப் பற்றி 94:01 வசனத்திலும், திருப்பெயரைப்

பற்றி 3:14, 33:40, 48:29, 47:02, 61:06 வசனங்களிலும், அறிவைப் பற்றி 53:02 வசனத்திலும், திருக்குடும்பத்தினரைப் பற்றி 33:33 வசனத்திலும், திருத் தோழர்களைப் பற்றி 48:29, 9:40 வசனங்களிலும், பேச்சைப் பற்றி 53:03 வசனத்திலும், கனவைப் பற்றி 48:27 வசனத்திலும், உடைகளைப் பற்றி 73:01 வசனத்திலும், வாழ்வைப் பற்றி 15:72 வசனத்திலும், நற்குணத்தைப் பற்றி 68:04 வசனத்திலும், ரஹ்மத் என்பதாக 21:107 வசனத்திலும் அழகிய முன்மாதிரி என்பதாக 33:21 வசனத்திலும் கூறுகிறான்.

மேற்கூறப்பட்ட அனைத்து ஆயத்துகளிலும், அல்லாஹ் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மவ்லிதை (சிறப்புகளை) கூறியிருக்கிறான் என்பது தெளிவாகிறது. அல்லாஹ்வைவிட நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை அதிகமாகப் புகழ்வது மனிதர்களால் முடியாத ஒன்றாகும். எனவே, அல்லாஹ் ஓதிய மவ்லிதை (நபிப்புகழை) நாம் வழிமொழிவது எப்படி ஷிர்க் ஆகும்?

மவ்லிதை ஷிர்க் என்று சொல்பவர்களின் கூற்றுப்படி மவ்லிது ஓதிய இறைவன் ஷிர்க் வைத்தவனா? மவ்லிது ஓதுவது இறைவனுடைய கட்டளையாகும். எனவே, இறைவனின் கட்டளையை நிறைவேற்ற மவ்லிது ஓதுவது அவசியமாகும்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஓதிய மவ்லிது:

ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பின்வரும் கவிதைகளைப் பாடித் தம்மைத் தாமே புகழ்ந்திருக்கிறார்கள்.

1. நான் நபி என்பதிலும், அப்துல் முத்தலிபின் மகன் என்பதிலும் பொய்யில்லை (நூல் : புகாரீ)

2. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கந்தக் யுத்தத்தில் ஸஹாபாக்களைப் பார்த்துப் பாடினார்கள் :

اللهم لا عيش إلا عيش الاخرة * فاكرم الانصار والمهاجرة *

யா அல்லாஹ்! மறுமை வாழ்வை விடச் சிறந்தது. எந்த வாழ்வுமில்லை! அன்ஸாரிகளுக்கும், முஹாஜிரீன்களுக்கும் சங்கையும், பரக்கத்தும் கொடு என்றார்கள். (நூல் : புகாரீ 1/415)

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் மதீனாவில் ஒரு பகுதிக்குச் சென்றார்கள். அங்கு சில சிறுமிகள் தப்ஸ் அடித்து நாங்கள் பனூ நஜ்ஜார் கோத்திரத்தைச் சார்ந்தவர்கள். முஹம்து நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சிறந்த அண்டை வீட்டுக்காரர் ஆவார் என்று பாடினார்கள். இதைக் கேட்ட நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்:

يعلم الله اني لا حبكن *

நிச்சயமாக நான் உங்களைப் பிரியப்படுகிறேன். இதை அல்லாஹ் அறிவான் என்று பாடினார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் விரலில் கல்பட்டு இரத்தம் வடிந்தது அப்போது:

நீ இரத்தம் வடிந்த விரல் இதை அல்லாஹ்வின் பாதையில் சந்தித்திருக்கிறாய் என்று பாடினார்கள். மேற்கூறப்பட்ட அனைத்து கவிகளும் நபிகளார் பாடிய கவிகளாகும். இறைவனால் (இறைவன் பொருந்திக் கொண்டான்) என்று கூறப்பட்ட, இன்னும் நாயகத்தால் என் தோழர்கள் நட்சத்திரங்களைப் போன்றவர்கள். அவர்களை நீங்கள் யாரைப் பின்பற்றினாலும் நேர்வழியடைவீர்கள் என்று கூறப்பட்ட ஸஹாபாக்கள் ஓதிய மவ்லிது:

نحن الذين بايعوا محمدا * علي الجهاد ما بقينا ابدا *

நாங்கள் உயிர் வாழும் காலமெல்லாம் புனிதப்போர் செய்வோம் என நபிகளார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களிடம் ஒப்பந்தம் செய்து விட்டோம்.

கஅப் இப்னு ஜுஹைர் (ரலி) ஓதிய மவ்லிது :

والعفو عند رسول الله مأمول * فقد اتيت رسول الله معتذرا (الخ...) *

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் எச்சரிக்கை விடுத்துள்ளார்கள் என எனக்குத் தெரிவிக்கப்பட்டது. மன்னிப்பு என்பது நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம்

எதிர்பார்க்கப்பட்டது. மன்னிப்புத் தேடியவராக நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வந்தேன். மன்னிப்பு ஒப்புக் கொள்ளப்பட்டது. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஒளி கொடுக்கும் பேரொளியாகவும், இந்திய வாட்களில் உருவிய வாளாகவும் இருக்கிறார்கள் என்று கஅப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் பாடியபோது, அல்லாஹ்வுடைய வாள் என திருத்திக் கொடுத்தார்கள். இன்னும் ஒரு போர்வையையும் அன்பளிப்பாக நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கொடுத்தார்கள். (நூல் : பைஹகீ, ஹாகிம் 6558)

அண்ணலார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அவைக் கவிஞர் ஹஸ்ஸான் இப்னு ஸாபித் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஓதிய மவ்லிது :

هجوت محمدا فاجبت عنه * وعند الله في ذاك الجزاء* (الخ...)

1. இறை மறுப்பாளர்களே! நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை குறைபடுத்திப் பேசுகிறீர். அதற்குப் பதிலாக, அவர்களை நான் புகழ்ந்து பாடுவேன். அதற்குரிய நற்கூலி இறைவனிடம் உண்டு.

2. நல்லவராகவும், நேர்வழியில் உள்ளவராலும் இருக்கின்ற நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் குறைவுபடுத்திப் பாடுகின்றீர்கள். வாக்குறுதிகளை நிறைவேற்றுவது அவர்களின் அழகிய குணம்.

3. அவர்கள் விஷயத்தில் இறைவன் கூறினான். சத்தியத்தைக் கூறுகின்ற ஓர் அடியாரை திருத்தூதராக அனுப்பியுள்ளேன் என்று ஹஸ்ஸான் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் பாடினார்கள். (நூல் : முஸ்லிம் 4545)

عفو عن الزلات يقبل عذرهم * وان يحستوا فالله با لخيراجود *

பாபங்களை மன்னித்துக் காரணங்களை ஏற்றுக் கொள்ளும் நபியே! நாயகமே! என்று பாடினார்கள். (நூல் : சீரத் இப்னு ஹிஷாம் 4/282)

அப்துல்லாஹ் இப்னு ரவாஹா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஓதிய மவ்லிது :

எங்களிடையே அல்லாஹ்வுடைய தூதர் இருக்கின்றார்கள். காலைப் பொழுதில் இறை வேதத்தை ஓதுவார்கள். குருட்டுத் தன்மையிலிருந்து எங்களுக்கு நேர்வழி காட்டினார்கள். அவர்கள் கூறியது நிச்சயம் நிகழும் என எங்கள் உள்ளங்கள் உறுதியாக நம்புகின்றன. இரவில் இறை நிராகரிப்பாளர்கள் படுக்கையில் உறங்கும்போது, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் படுக்கையிலிருந்து எழுந்து தொழுவார்கள் என்று பாடினார்கள். (நூல் : புகாரீ 1155)

ஹழ்ரத் ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஓதிய மௌலித் :

رأيت الهلال ووجه الحبيب * صار هلا لين عند النظر *

هذا يغيب وهذا حضر * وليس المغيب كمن قدحضر *

நான் நிலவையும், நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திருமுகத்தையும் பார்த்தேன். இரண்டும் ஒளியால் ஜொலித்தது. நிலவின் அழகு மறைந்து விடும். ரஸுலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஒளி மறையாது. எனவே, ரஸுலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முகம் நிலவை விட ஒளிர்ந்து கொண்டே இருந்தது எனப் பாடினார்கள். (நூல் : ஷரஹ் புகாரீ அய்னீ).

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மதீனாவிற்கு ரபீஉல் அவ்வல் 12ஆம் பிறை தமது பிறந்த நாளின்போது, ஹிஜ்ரத் செய்து மதீனாவில் நுழைந்தார்கள். அப்போது மதீனாவாசிகள் அனைவரும் தப்ஸ் அடித்து கீழ்வரும் பாடலைப் பாடி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை வரவேற்றனர்.

طلع البدر علينا * من ثنيات الوداع * وجب الشكر علينا * مادعي لله داع *

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் மகிழ்ச்சியுடன் வரவேற்பை ஏற்று வருகை புரிந்தார்கள். (நூல் : சீரத் இப்னு ஹிஷாம்

507/2) (பைஹகீ தலாயிலுந் நுபுவ்வா)

ஒருநாள் இரவு நேரம் ஹழ்ரத் உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நகர சோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு வீதியில் சென்று கொண்டிருக்கும்போது ஒரு வீட்டில் விளக்கு வெளிச்சம் தெரிந்தது. அவ்வீட்டின் அருகிற் சென்றபோது வீட்டினுள் ஒரு வயோதிகப் பெண் கம்பளி நூலை நூற்றுக் கொண்டே பின்வரும் பாடலைப் பாடினார்.

علي محمد صلاة الابرار * صلي عليه ا لطيبون الاخيار * (الخ ...)

இந்தப் பாடலைக் கேட்ட உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்க்ள் அழுது கொண்டே அதே இடத்தில் அமர்ந்து விட்டார்கள். (நூல் : ஷிஃபா (2/15).

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உம்றா செய்வதற்காக மக்காவில் நுழைந்த போது, அவர்களின் முன்னால் (ஒட்டகத்தின் கடிவாளத்தைப் பிடித்தவர்களாக) அப்துல்லாஹிப்னு ரவாஹா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நின்ற வண்ணம் கீழ்க்கண்ட பாடலைப் பாடினார்கள்.

خلوا بني الكفار عن سبيله * اليوم نضر بكم علي تنزيله * (الخ...)

காஃபிர் கூட்டத்தினரே! இன்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்கா நுழைவதைத் தடுத்தால், உடலை விட்டு தலையை எடுக்கும்படியும், ஒரு நண்பன் இன்னொரு நண்பனை மறுக்கும்படியும் ஆன ஒரு போரை நடத்தி விடும் என்று பாடினார்கள். அப்போது இப்னு ரவாஹா அவர்களே! நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் முன்னிலையில், ஹரம் எல்லையில் இருக்கும்போது, கவிதையா பாடுகிறீர்? என்று உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியபோது, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அவரை விட்டு விடுங்கள். இக்கவிதை அவர்களை (காஃபிர்களை) அம்பு எய்வதை விட அதிகமாகத் தாக்கும் என்பதாகக் கூறினார்கள். (நூல் : திர்மதி, நஸாயி).

ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது சன்னிதானத்தில் மத்ஹ் (புகழை) ஓதிச் சமர்ப்பித்த ஸஹாபாக்கள் 56 நபர்களில்

பிரபல்யமான ஸஹாபாக்கள் 10 பேர் :

(1) ஹஸ்ஸான் இப்னு ஸாபித் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், (2) அப்துல்லாஹிப்னு ரவாஹா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், (3) கஅப் இப்னு ஜுஹைர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், (4) லபீத் இப்னு ரபீஆ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், (5) அபூதர்தா அல் அன்ஸாரி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், (6) உர்வா பின் அப்துல் முத்தலிப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், (7) அப்பாஸ் இப்னு மிர்தாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், (8) நாஃபிகா அல் ஜுஃதி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், (9) அதீ இப்னு ஹாதம் தாஇ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், (10) அம்ர் இப்னு மஃதிகரப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஆகியோர் மவ்லிது (புகழை) நபி ஸல்லல்லாஹு அவர்களின் சன்னிதானத்திலேயே ஓதியிருக்கிறார்கள். அல்லாஹ்வால் ஓதப்பட்ட, ஸஹாபாக்களால் ஓதப்பட்ட மவ்லிதை நாம் ஓதுவதில் என்ன குற்றமிருக்கிறது?

இறைவன் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஒவ்வொரு அங்கத்தையும் தனது திருமறையில் குறிப்பிடுகிறான். எனவே, மவ்லிது ஓதுவது அவசியமாக இருக்கிறது. ஆனால், சிலர் மவ்லிது ஓதுவது கூடாது என்கின்றனர். காரணம் ஷைத்தானுக்கு நன்மை செய்வதே பிடிக்காது. எனவே, ஷைத்தான்கள் (மவ்லிதை மறுத்தவர்கள்) மவ்லிது என்ற நல் அமலையும் இன்னும் பல நல்ல அமல்களையும் தடுத்து வருகின்றனர்.

மவ்லிதால் ஏற்படும் நன்மைகளும், பலன்களும்:

(1) இறைவனின் பாதுகாப்பு கிடைக்கிறது.

(2) இபாதத் செய்த பலன் கிடைக்கிறது

(3) இறைவனுடைய அன்பும், அண்ணலார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அன்பும் கிடைக்கிறது.

இறைவனின் பாதுகாப்பு கிடைக்கிறது :

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் புகழ்வதால் பயனடைவது நாம் தான்! மவ்லிது ஓதக் கூடியவர்களுக்கு

மலக்குமார்களைக் கொண்டு பாதுகாப்பு அரணை இறைவன் ஏற்படுத்துகிறான். நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் புகழ்ந்ததனால் ஹஸ்ஸான் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் உறுதுணை கிடைத்தது.

இறைவா! பரிசுத்த ஆன்மா ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மூலம் ஹஸ்ஸானை பலப்படுத்து என நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் துஆச் செய்தார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹஸ்ஸான் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குக் கூறினார்கள். ஹஸ்ஸானே! நீங்கள் இறைவனுக்காகவும், அவனது இறைத் தூதருக்காகவும் கவிபாடும் காலமெல்லாம் பரிசுத்த ஆன்மாவான ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் உங்களைப் பலப்படுத்திக் கொண்டே இருப்பார்கள். (நூல் : முஸ்லிம் 4545).

மேற்கூறப்பட்ட ஆதாரங்களின் மூலம் மௌலித் ஓதுவதால் இறைவனது பாதுகாப்பு மவ்லிது ஓதும் நம் அனைவருக்கும் கிடைக்கும் என்பது விளங்குகிறது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது மவ்லிது ஓதுவது ஒரு இபாதத் (வணக்கம்) ஆகும்.

நபிமார்களை நினைவு கூறுவது ஒரு இபாதத் (வணக்கம்) ஆகும் என நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (நூல் : ஜாமிஉஸ்ஸகீர் 1/665).

நபியே! உம்முடைய நினைவை (உதிப்பை) நாம் அதிகப்படுத்தினோம். (அல்குர்ஆன் 94 : 4).

அல்லாஹ்வும் அவனது மலக்குமார்களும் நபிகளார் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது ஸலவாத் சொல்கிறார்கள். ஈமான் கொண்டவர்களே! நீங்களும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மீது ஸலவாத்தும் ஸலாமும் சொல்லுங்கள் என்று இறைவவன் கூறுகிறான்.

ஸலவாத் ஓதுவது நம் கடமை. ஏனெனில், இறைவனின் கட்டளையாகும். மவ்லிது ஓதுவதால் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நினைவு கூறும் வாய்ப்பும், இறைவனின் கட்டளையை நிறைவேற்றும் வாய்ப்பும் கிடைக்கிறது.

மவ்லிது ஓதுவதால் இறைவனது அன்பும், இறைத்தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் அன்பும் நமக்குக் கிடைக்கிறது :

நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மதீனாவின் ஒரு பகுதிக்குச் சென்றார்கள். அப்போது சில சிறுமிகள் தப்ஸ் அடித்து பாட்டு பாடிக் கொண்டிருந்தனர். இதைக் கேட்ட நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்,

நான் உங்களை நேசிக்கிறேன். இதை அல்லாஹ் அறிவான் என்று கூறினார்கள். (நூல் : இப்னு மாஜா 1889).

என்னை நேசிக்காதவரை யாரும் முஃமீனாக முடியாது என்னும் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திருவாக்கை (புகாரீ 1/4) மவ்லிது ஓதுவதன் மூலம் நிறைவேற்றுவதோடு, முஃமீனாகும் பாக்கியம் பெற்றுக் கொள்ள வேண்டும். மவ்லிது ஓதுவதன் மூலம் நபிநேசம் கிடைக்கிறது. நபி நேசம் கிடைத்தால் இறை நேசமும் கிடைத்து விடுகிறது. மவ்லிது ஓதுவதால் பயனடைவது நாமே! இதைத்தான் ஹஸ்ஸான் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்.

என் கவியைக் கொண்டு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் புகழ் பெறவில்லை. ஆனால், நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் கொண்டு தான் என் கவிக்குப் புகழ் கிடைக்கிறது என்பதாகக் கூறினார்கள்.

காஃபிர்களே! முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைக் குறைவுபடுத்திப் பாடுகிறீர்கள். அதற்குப் பதிலளிக்கும் வண்ணம் அவர்களை நான் புகழ்ந்து படிப்பேன். அதற்கு (புகழ்ந்து பாடியதற்கு) நற்கூலி உண்டு என்று ஹஸ்ஸான் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள். (நூல் : முஸ்லிம் 4545).

எனவே, நாம் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

அவர்களைப் புகழ்ந்து பாடுவதால் நன்மை கிடைக்கிறது என்பதை ஹஸ்ஸான் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள். நற்செயல்கள் செய்வதால் எவ்வாறு நன்மை கிடைக்கிறதோ அதேபோல் மவ்லிது ஓதுவதால் அதிக நன்மைகள் கிடைக்கின்றன.

பள்ளிவாசலில் மவ்லிது :

பள்ளிவாசலில் ஹஸ்ஸான் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கவி பாடிக் கொண்டிருந்தார்கள். அங்கு சென்ற உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கடைக்கண் பார்வையால் ஹஸ்ஸான் ரலியல்லாஹு அன்ஹு அவர்களைப் பார்த்தார்கள்.

அப்போது ஹஸ்ஸான் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் உங்களை விடச் சிறந்தவர்களான நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இருக்கும்போதே, இப்பள்ளிவாசலில் கவி பாடியுள்ளேன் என்றார்கள். (நூல் : புகாரீ 3212, முஸ்லிம் 4539).

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹஸ்ஸான் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்குப் பள்ளிவாசலில் மிம்பரை அமைத்துக் கொடுத்தார்கள். அதில் அவர் ஏறி நின்று நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையே புகழ்வார்கள். (நூல் : திர்மிதி, 2773, அபூதாவூத் : 4361)

கஅப் இப்னு ஜுஹைர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் பள்ளிவாசலில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் புகழ்ந்து படித்தார்கள். (நூல் : ஹாகிம் : 6555).

பள்ளிவாசலில் மவ்லிது ஓதுவது ஸஹாபாக்களின் வழிமுறையாக இருக்கிறது.

மவ்லிது ஓதுவதைப் பற்றி ஸஹாபாக்கள் கூறும் கருத்து :

(1) முதலாம் கலீபா அபூபக்கர் ஸித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள் :

யார் ஒருவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மவ்லிதிற்கு ஒரு திர்ஹம் செலவு செய்கிறாரோ அவர் சுவனத்தில் எனது நண்பராகி விட்டார்.

(2) இரண்டாம் கலீபா உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள் :

யார் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மவ்லிதிற்குக் கண்ணியம் செய்கிறாரோ அவர் இஸ்லாத்திற்கு உயிர் கொடுத்தவராவார்.

(3) மூன்றாம் கலீபா உதுமான் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள் :

யார் ஒருவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மவ்லிதிற்கு ஒரு திர்ஹம் செலவு செய்கிறாரோ அவர் பத்ருப் போரிலும், ஹுனைன் போரிலும் கலந்து கொண்டவர் போலாவார்.

(4) நான்காம் கலீபா அலீய் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள் :

யார் ஒருவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மவ்லிதிற்குக் கண்ணியம் செய்கிறாரோ இன்னும் மவ்லிது ஓதக் காரணமாக இருக்கிறாரோ, அவர் ஈமான் கொண்டவராகவே தவிர பூமியிலிருந்து வெளியேறமாட்டார் (முஃமீனாகவே மரணிப்பார்); எந்தக் கேள்வி கணக்குமின்றி சுவனத்தில் நுழைவார். நூல் : (முதாரிஜுஸ்ஸுஊத் 15, நிஃமதுல் குப்ரா 7).

மேற்கூறப்பட்ட வசனங்களிலும், ஹதீஸிலும் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் புகழ்ந்தது போல், நாமும் புகழ்கிறோம். புகழ்வதை (மவ்லிதை) ஷிர்க், ஹராம் என்று கூறினால் இறைவன் ஓதியது ஷிர்க்கா? எப்படி ஷிர்க் ஆகும். மவ்லிதை ஓத வேண்டாமென்று சொல்பவர்கள் இறைவனது கட்டளையை நிறைவேற்ற வேண்டாமென்று சொல்கிறார்கள். எனவே, இறைக் கட்டளையை நிறைவேற்ற மவ்லிது ஓதுவது அவசியம்.

இறைவன் ஓதிய, ஸஹாபாக்கள் ஓதிய, மவ்லிதை நாமும் ஓதி இறையருளையும், பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பேரன்பையும் பெற்று வாழும் பாக்கியத்தை எல்லாம் வல்ல இறைவன் தந்தருள்வானாக! ஆமீன்!!

தொகுப்பு :
காதிமுல் கலீல் எஸ். உமர் கையாம் ஆலிம்
யாஸீனிய் ஹக்கிய்யுல் காதிரிய்

நபிவழியும் நவீனங்களும்

– ஓர் ஆய்வு

சுன்னத் என்றால் வழிமுறை என்பது அகராதிப் பொருள். அது நல்லதாக இருந்தாலும், தீயதாக இருந்தாலும் சரியே. (நூல் : லிஸானுல் அறப் பா – 13, பக்கம் : 225, தாஜுல் உரூஸ் பா – 9, பக்கம் 222).

பின்வரும் ஹதீஸை ஆதாரமாக வைத்து, சுன்னத் என்பதற்கு நல்ல வழிமுறை / தீய வழிமுறை என இரு பொருள் அகராதியில் கொடுக்கப்பட்டுள்ளது.

யாரொருவர் (மார்க்கத்தில்) நல்ல சுன்னத்தை (வழிமுறையைச்) செய்தாரோ, அவருக்கு அதன் நற்கூலியும், மேலும் மறுமை நாள் வரை அதை யாரெல்லாம் செய்கிறார்களோ அவர்களின் நற்கூலியும் கிடைக்கும். (அதே போன்று) யாரொருவன் (மார்க்கத்தில்) கெட்ட சுன்னத்தை (வழிமுறை) செய்தானோ, அவனுக்கு அதன் தண்டனையும், மேலும் மறுமைநாள் வரை அதை யாரெல்லாம் செய்கிறார்களோ, அவர்களது தண்டனையும் கிடைக்கும் என்பதாக நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். (நூல் : புகாரீ, முஸ்லிம்).

சுன்னத் என்பதற்கு மார்க்கத்தில், நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது சொல், செயல், ஆமோதித்தல் ஆகியவற்றைக் குறிக்கும். (நூல் : லிஸானுல் அறப் பா : 13, பக்கம் 225, தாஜுல் உரூஸ் பா – 9, பக்கம் 244).

மேலும், சுன்னத் என்பது நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மற்றும் அவர்களது தோழர்களின் சொல், செயல், சைக்கினை (ஆமோதித்தல்) ஆகியவற்றைக் குறிக்குமென்று இமாம் இப்னு ஹஜருல் ஹைதமீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள், ஷரஹுல் அர்பயீன் என்ற கிதாபிலும் (1:718), இமாம் இப்னு மன்ஸூர் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் தமது லிஸானுல் அறப் என்ற கிதாபிலும் (6 : 8), இமாம் நவவீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் முஸ்லிமின் ஷரஹிலும் (8:480, 4:113, 3:423) குறிப்பிடுகிறார்கள்.

பின்வரும் ஹதீஸை ஆதாரமாக வைத்து நபித் தோழர்களது

வழிமுறைகளையும், சுன்னத் என்று கூறலாம் எனத் தெளிவாகிறது.

இர்பாழ் பின் சாரியா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள் :

எனது வழிமுறையையும், நேர்வழி பெற்ற எனது கலீபாக்களின் வழிமுறையையும் பின்பற்றுங்கள். அவ்வழியை கடைவாய்ப் பற்களால் இறுகக் கட்டித்துக் கொள்ளுங்கள் என்பதாக நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளினார்கள். (நூல் : அபூதாவூது 4607, திர்மிதீ 2676, இப்னு மாஜா 42, தாரமீ 95, அஹ்மது 4/126).

இதன் மூலம் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது வழிமுறைகள் மற்றும் நேர்வழி பெற்ற அவர்களது கலீபாக்கள், ஏனைய தோழர்களது வழிமுறைகளையும் சுன்னத் என்ற வார்த்தை குறிக்கிறது எனத் தெளிவாகிறது.

சுன்னத் பின்பற்றுவதின் அவசியம் :

நம் தூதர் உங்களுக்கு எதைக் கொடுத்தாரோ, அதனை (முழுமையாக) நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். எதனை விட்டும் உங்களைத் தடுத்தாரோ (அதனை விட்டும் முழுமையாக) நீங்கள் விலகிக் கொள்ளுங்கள். (அல்குர்ஆன் 59:07)

அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள் : உங்களுக்கு எதை நான் ஏவினேனோ அதை எடுத்துக் கொள்ளுங்கள். எதைத் தடுத்தேனோ அதை விட்டும் தவிர்ந்து கொள்ளுங்கள் என்பதாக நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (நூல் : இப்னு மாஜா)

மேற்கூறப்பட்ட மறை வசனத்தின் மூலமும், ஹதீஸின் மூலமும் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது சொல், செயல், சைக்கினை அனைத்தையும் அடிபிறழாமல் அப்படியே பின்பற்றுவது ஈமான் கொண்டோர் அத்துணை பேர் மீதும் கடமையெனத் தெளிவாகிறது. இதனை யார் மறுக்கின்றார்களோ, அவர்கள் இறை வசனத்தையும், இறைத் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சொல்லையும் மறுத்ததன் காரணத்தினால் காஃபிர் ஆகிவிடுகின்றனர் என்பதில்

சந்தேகமில்லை.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், இறைவனின் கட்டளையைக் கூறினால் (அதை) எடுத்துக் கொள்வோம். தன்னிச்சையாகக் கூறியதை எடுத்துக் கொள்ளத் தேவையில்லையே?! எனும் குதர்க்கவாதிகளான வஹ்ஹாபிகளின் கேள்விக்கு, இறைவன் தன் திருமறையில் பின்வருமாறு பதிலளிக்கிறான்.

(நம் தூதர் எதையும் தம்) மன விருப்பப்படிப் பேசுவதில்லை. அது (அவருக்கு) அறிவிக்கப்படும் (வஹீயாகிய) அறிவிப்பே தவிர (வேறு) இல்லை. (அல்குர்ஆன் 53:23).

மிக்தாம் பின் மஃதீகரிப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்: அறிந்து கொள்ளுங்கள்! நிச்சயமாக நான் குர்ஆனும் அதைப் போன்றது (ஹதீஸு)ம் சேர்ந்தே வழங்கப்பட்டுள்ளேன் என்பதாக நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (நூல் : அபூதாவூது 4604, திர்மிதீ 2664, இப்னு மாஜா 12, முஸ்னது அஹ்மது 4/132)

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது வாழ்க்கை முழுவதும் குர்ஆனாகவே இருந்தது என்பதாக அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் அறிவிக்கின்றார்கள். (நூல் : முஸ்லிம் பா - 1, பக்கம் 512, எண் : 746).

இறைவனது கட்டளையும், அறிவிப்புமாகவே இருந்த அண்ணலார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சொல், செயல், வாழ்க்கை ஆகியவற்றை எப்படிப் பின்பற்றாமல் இருக்க முடியும்? இரண்டில் எதை மறுத்தாலும் அவன் காஃபிரின் பட்டியலில் இடம் பெறுவானெனப் புலனாகிறது.

கீழ்ப்படிதல் :

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதில் தன் அறிவுக்கு ஏற்றதையும் பொருந்தியதையும் மட்டும் எடுத்துக் கொண்டு, ஏற்காததை விட்டுவிட வேண்டியதுதானே... என்று குழப்பவாதிகளான வஹ்ஹாபிகள் கூறுகின்றனரே? என்ற கேள்வியின் பதிலைப் பின்வரும் ஆதாரங்கள் (ஆயத், ஹதீஸ்) தெளிவுபடுத்துகின்றன.

யார் (அல்லாஹ்வின்) தூதருக்குக் கீழ்ப்படிந்தாரோ, அவர் நிச்சயமாக அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிந்து விட்டார். (அல்குர்ஆன் 4:80).

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குக் கீழ்ப்படிந்தால் போதும். நிச்சயமாக, அது அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிந்ததாகுமென வசனம் 4:80 இறை நம்பிக்கை கொண்டோர்களுக்கு சுபச் செய்தி அறிவிக்கிறது.

அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள். எனக்குக் கட்டுப்பட்டவர் நிச்சயமாக அல்லாஹ்வுக்கும் கட்டுப்பட்டவராவார். எனக்கு மாறு செய்தவர் நிச்சயமாக அல்லாஹ்வுக்கும் மாறு செய்தவராவார் என நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (நூல் : இப்னு மாஜா பா – 3).

அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்: எனது சமுதாயத்தில் அனைவரும் சொர்க்கத்தில் நுழைவர். (ஆனால்), என்னை மறுத்தவரைத் தவிர என்பதாக நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். நாயகமே! தங்களை யார் மறுக்க முடியுமென நபித் தோழர்களால் கேட்கப்பட்டது. எனக்கு யார் வழிப்பட்டாரோ (அடிபணிந்தாரோ) அவர் சொர்க்கத்தில் நுழைவார். எனக்கு யார் மாறு செய்தாரோ அவர், என்னை மறுத்தவராவார் (சொர்க்கத்தில் நுழைய மாட்டார்) என்று நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (நூல் : புகாரீ)

கீழ்ப்படிதல் என்றால், ஒரு மாணவன் தன் ஆசிரியரின், பிள்ளைகள் தனது பெற்றோரின், சீடன் தன் ஞான குருவின், தொழிலாளி தன் முதலாளியின், மனைவி தன் கணவரின் அனைத்து வித கட்டளைகளையும், அறிவிப்புகளையும் முழுமையாக ஏற்றுக் கொள்வதே ஆகும். அது தன் அறிவுக்கு எட்டினாலும் எட்டாவிடினும் மனம் விரும்பினாலும் விரும்பாவிடினும் சரியே. நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டுமெனில், அவர்களது சொல், செயல் ஆமோதித்தல் போன்ற சுன்னத்தை சுய விருப்பு, வெறுப்பின்றி அடிபணிந்து ஏற்று நடப்பதே ஆகும்.

கீழ்ப்படிந்தோரின் நிலை :

எவர்கள் அல்லாஹ்வுக்கும் (அவனது) தூதருக்கும் கீழ்ப்படிந்து

நடக்கின்றாரோ, அத்தகையோர் - எவர்கள் மீது அல்லாஹ் அருள் புரிந்தானோ அத்தகைய இறைத் தூதர்கள், உண்மையாளர்கள், உயிர்த்தியாகிகள், நல்லடியார்கள் ஆகியோருடன் (சொர்க்கத்தில்) இருப்பார்கள். இவர்கள் தாம் அழகிய தோழர்கள். (அல்குர்ஆன் 4:69).

இறைவனுக்கும், இறைத்தூதருக்கும் முழுமையாகக் கீழ்ப்படிந்தோர் (பின்பற்றியோர்) இறைப் பொருத்தம் பெற்ற நபிமார்கள், உண்மையாளர்கள், உயிர்த்தியாகிகள், நல்லடியார்களுடன் சொர்க்கத்தில் மகிழ்வாக இருப்பார்களென்று மேற்கூறப்பட்ட வசனம் சுபச்செய்தி அறிவிக்கிறது.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குக் கீழ்ப்படியாதவர்கள் பொய்யர்களுடனும், தீயவர்களுடனும், இறையன்பை அடையாத பாபிகளுடனும், உலகில் வீணாக வாழ்ந்து ஈமான் இல்லாத நிலையில் மரணித்தவர்களுடனும், (நரகத்தில்) இருப்பார்கள் என இவ்வசனத்தின் எதிர்மறை கருத்து தெரிவிக்கிறது.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை முழுமையாகப் பின்பற்ற வேண்டும், அவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டுமெனக் கட்டளையிடும் வசனங்கள்...

1. அல்லாஹ்வுக்கு நீங்கள் வழிபடுங்கள். (அவன்) தூதருக்கும் நீங்கள் வழிபடுங்கள் (அல்குர்ஆன் 64:12).

2. இறை நம்பிக்கையாளர்களே! அல்லாஹ்வுக்கு வழிபடுங்கள். இன்னும் (அவன்) தூதருக்கும், உங்களில் அதிகாரம் உடையவருக்கும் வழிபடுங்கள். (அல்குர்ஆன் 4:59).

3. அல்லாஹ்வையும், இத்தூதரையும், அவருக்கு இறக்கப்பட்ட (வேதத்)தையும், நம்பிக்கை கொள்பவர்களாக அவர்கள் இருந்திருப்பார்களானால் (இறை நிராகரிப்பாளர்களாகிய) அவர்களை (த் தங்களுடைய) உற்ற நண்பர்களாக ஆக்கிக் கொண்டிருக்க மாட்டார்கள். எனினும், அவர்களிலிருந்து பெரும்பாலானோர் பாபிகளாகவே இருக்கின்றனர். (அல்குர்ஆன் 5 : 81).

அல்லாஹ்வையும், அவனது தூதர் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களையும், அவர்களுக்கு அருளப்பட்ட

வேதத்தையும், முழுமையாக ஈமான் கொண்டு, தன் வாழ்வில் பின்பற்ற வேண்டுமென்றும், அதில் தன்னறிவுக்கு ஏற்றதை எடுத்துக் கொண்டு, ஏற்காததை விட்டுவிடுபவர் இறைநிராகரிப்பாளர்களின் கூட்டாளி (நண்பர்கள்) ஆவர் என்றும் மேற்கூறப்பட்ட வசனம் தெரிவிக்கிறது.

4. (நபியே!) நிச்சயமாக நீங்கள் நேர்வழியின் பக்கம் வழி காட்டுகிறீர்கள். (அல்குர்ஆன் 42:52).

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நேர்வழி காட்டுகிறார்கள் என்று இறைவனே கூறியபின், அதைப் பின்பற்றவும் மாட்டோம், பின்பற்றவும் விடமாட்டோம் என அடம்பிடிக்கும் முழுமடையர்கள் காஃபிர் என்பதில் சற்றும் சந்தேகமில்லை.

5. நிச்சயமாக இதுவே நேரான என்னுடைய வழியாகும். எனவே, இதனையே (என்னுடைய வழியையே) நீங்கள் பின்பற்றுங்கள். (இதற்கு மாறுபட்ட வேறு) வழிகளைப் பின்பற்றாதீர்கள். (வேறு வழிகளைப் பின்பற்றினீர்களானால்) அவனுடைய (அல்லாஹ்வுடைய) வழியை விட்டும் உங்களை அது பிரித்துவிடும். இது நீங்கள் (அல்லாஹ்வுக்கு) அஞ்சியவர்களாக நடந்து கொள்ளும் பொருட்டு, உங்களுக்கு அவன் அறிவுறுத்துகிறான். (அல்குர்ஆன் 6:154).

இவ்வசனம் (1) இறைவனின் நேர்வழியான இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழியைப் பின்பற்ற வேண்டுமென்றும், (2) நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழியைப் புறக்கணிக்கும் பித்அத்வாதிகளின் (வஹ்ஹாபிகளின்) வழியைப் பின்பற்றக்கூடாது என்றும் தெளிவுபடுத்துகிறது.

6. (நபியே!) நீங்கள் கூறுவீராக! நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாக இருந்தால், என்னைப் பின்பற்றுங்கள். (அப்பொழுது தான்) அல்லாஹ் உங்களை நேசிப்பான். (அதன் மூலம்) உங்கள் பாபங்களையும் மன்னிப்பான். (அல்குர்ஆன் 3:31).

அல்லாஹ்வை நாம் நேசிக்க வேண்டும், அல்லாஹ் நம்மை நேசிக்க வேண்டுமென்ற எண்ணம்தான் ஒவ்வொரு முஃமீனின் உள்ளத்திலும் ஊடுருவி இருக்கும். அந்த நற்பாக்கியத்தை நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பினப்பற்றுவதில்

இறைவன் வைத்துள்ளான். மேலும், யார் வேண்டுமானாலும் அல்லாஹ்வை நேசிக்கலாம், ஆனால், அல்லாஹ் தனது அடியார்களில் குறிப்பிட்ட சிலரை மட்டுமே நேசிக்கிறான் (இறைநேசர்கள்). நிச்சயமாக அவர்கள் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சுன்னத்தைப் பின்பற்றியவர்களாகத் தான் இருக்க வேண்டும்.

7. (நபியே! இன்னும் அவர்களிடத்தில்) நீங்கள் கூறுவீராக! அல்லாஹ்வுக்கும் (அவன்) தூதருக்கும் நீங்கள் கீழ்ப்படிந்து நடங்கள்; பின்னர் அவர்கள் புறக்கணித்தால் நிச்சயமாக அல்லாஹ் நிராகரிப்பவர்களை நேசிக்க மாட்டான். (அல்குர்ஆன் 3:32).

அல்லாஹ்வுக்கும், அவனது தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் கீழ்ப்படிந்து அவர்களது வழியைப் பின்பற்றாதவன் காஃபிர் (இறை நிராகரிப்பாளன்) என்று இவ்வசனம் தெள்ளத் தெளிவாக விளக்குகிறது.

8. நீங்கள் அல்லாஹ்வை அஞ்சுங்கள். என்னைப் பின்பற்றுங்கள். (அல்குர்ஆன் 3 : 50)

9. (மேலும், அந்த சீடர்கள்) எங்களுடைய இறைவனே! நீ இறக்கி வைத்த (வேதத்)தை நாங்கள் நம்பிக்கை கொண்டோம்! (உன்) தூதரையும் பின்பற்றினோம்! எனவே, சாட்சி கூறுபவர்களுடன் எங்களை நீ பதிவு செய்திடுவாயாக! (என்று கூறிப் பிரார்த்தித்தனர்).(அல்குர்ஆன் 3.53).

குர்ஆனை நம்பிக்கை கொண்டு, நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் சுன்னத்தைப் பின்பற்றுபவர்கள் சாட்சியாளர்களான முஃமீன்கள் என்பதையும், இதனை மறுப்போர்கள் இறை நிராகரிப்பாளர்களான காஃபிர்கள் என்பதையும் இவ்வசனம் அறிவிக்கிறது.

10. இன்னும், தூதர்களில் எவரையும் – அல்லாஹ்வின் கட்டளைக் கொப்ப (மக்களால்) அவர் பின்பற்றப்படுவதற்காகவே தவிர நாம் அனுப்பி வைக்கவில்லை. (அல்குர்ஆன் 4:64)

1,24,000 நபிமார்கள் இவ்வுலகிற்கு அனுப்பப்பட்டதன் நோக்கமே, அவர்களை நாம் முழுமையாகப் பின்பற்ற வேண்டும் என்பதுதான் – என இறைவன் திருமறையில் (நெடுக்க) கூறியிருக்க, அதைப்

புறக்கணிப்போரும், அவர்களை ஆதரிப்போரும் எப்படி முஃமினாக இருக்க முடியும்?

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது சுன்னத்தைப் பின்பற்ற வேண்டியதன் அவசியத்தை குர்ஆன் முழுவதும் கூறப்பட்டு இருப்பதை நம்மால் காண முடிகிறது.

மேலும், நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள் : யார் எனது வழிமுறையைப் புறக்கணித்தானோ, அவன் என்னைச் சார்ந்தவன் அல்ல. (நூல் : புகாரீ, ஃபத்ஹுல் பாரி பா – 9, பக் : 5).

பேச்சில் சிறந்தது அல்லாஹ்வின் (பேச்சான) புனித வேதம், வழிமுறையில் சிறந்தது எனது வழிமுறை ஆகும். காரியங்களில் மிகக் கெட்டது புதிதாக உண்டாக்கப்பட்டவைகள். அவைகள் அனைத்தும் வழிகேடுதான். (நூல் : புகாரீ எண் : 2120).

நிச்சயமாக அல்லாஹ், (எனது) சுன்னத்தைப் பின்பற்றும் அடியானை சொர்க்கத்தில் நுழைவிப்பான். (நூல் : ஷிஃபா பா : 2, பக் : 10).

குழப்பமான காலத்தில் எனது சுன்னத்தைப் பின்பற்றியவருக்கு நூறு ஷஹீதின் (இறைவழியில் தன் உயிரைத் தியாகம் செய்தவர்களின்) அந்தஸ்து கிடைக்கும் என்று அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள். (நூல் : ஷிஃபா பா : 2, பக் : 10)

அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள் : எனது வழிமுறையை (செயல்பாட்டின் மூலம்) உயிர்ப்பித்தவர், என்னை உயிர்ப்பித்தவராவார். என்னை உயிர்ப்பித்தவர் என்னுடன் (நாளை) சொர்க்கத்தில் இருப்பார். (நூல் : ஷிஃபா பா : 2, பக் : 10).

மேற்கூறப்பட்ட ஆயத்துகள், ஹதீதுகள் மூலம் ஒவ்வொரு முஃமீனும் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் புனித வழிமுறையைக் கட்டாயம் பேண வேண்டுமென்று நிரூபணமாகிறது. அதுதான் இம்மையிலும் மறுமையிலும் வெற்றியைத் தரும் என்பதில் சற்றும் சந்தேகம் இல்லை.

வள்ளல் நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிமுறையை வாழ்வில் பேணவும், வாஞ்சைமிகுந்த அவர்களது

திருவதனத்தைக் காணவும் எல்லாம் வல்ல இறைவன், நம்மனைவருக்கும் அருள்புரிவானாக! (ஆமீன்...).

பித்அத் :

பித்அத் என்ற வார்த்தைக்குப் புதுமை, நவீனம் என்று அகராதிப் பொருளாகும். மேலும், பித்அத் என்பது புதுமையானவைகள் அனைத்தையும் குறிக்குமென்று இமாம் இப்னு ஸிக்கீன் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகிறார்கள். (நூல் : லிஸானுல் அறப் பா : 8, பக் 6, தாஜுல் அரூஸ் பா : 5, பக் : 27)

பித்அத் என்ற வார்த்தை முன்மாதிரி இல்லாத அனைத்தையும் குறிக்குமென்று இமாம் அல்ஹாஃபிழ் இப்னு ஹஜர் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் குறிப்பிடுகிறார்கள். (நூல் : ஃபத்ஹுல் பாரி பா 13, பக் 278, ஸுன்னத்துன் நபவிய்யா பா : 4, பக்கம் : 224, மிர்காத் பா : 1 பக் : 30)

அதாவது, முன்மாதிரியின்றி படைக்கப்பட்ட, உண்டாக்கப்பட்ட, செய்யப்பட்ட அனைத்தையும் பித்அத் என்ற வார்த்தை குறிக்கும்.

வானங்களையும், பூமியையும் முன்மாதிரியின்றி அவன் (அல்லாஹ்) படைக்கிறவன். ஒன்றை உண்டாக்க நாடினால், அதனிடம் அவன் கூறுவதெல்லாம் "குன்" (ஆகுக) என்பது தான். உடனே அது (அப்படியே) ஆகிவிடும். (அல்குர்ஆன் 2 : 117).

இவ்வசனத்தில் பித்அத் என்ற பதத்தைக் கொண்ட பதீஃ என்ற வார்த்தையையே இறைவன் கூறியுள்ளான். பித்அத் என்பதற்கு நவீனம் - நூதனம் - புதுமை - முன்மாதிரி இல்லாதது என்பதே அகராதிப் பொருளாகிறது.

முஸ்லிம்களின் பறி பாஷையில் (ஷரீஅத்படி) பித்அத் என்ற வார்த்தை, நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது காலத்தில் இல்லாமல் (இப்பொழுது) புதுமையாக உண்டாக்கப்பட்ட -வைகளுக்குச் சொல்லப்படும் என்று இமாம் நவவீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகிறார்கள். (நூல் : தஹ்தீபுல் அஸ்மா (அகராதி நூல்) பா : 3, பக் : 22).

இர்பாழ் பின் சாரியா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்

அறிவிக்கிறார்கள் : புதுமையான காரியங்களை விட்டும் உங்களை நான் எச்சரிக்கிறேன். புதியவைகள் அனைத்தும் பித்அத் ஆகும். அனைத்து பித்அத்களும் வழிகேடாகும் என்பதாக நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (நூல் : அபூதாவூது 4607, திர்மிதீ 2676, தாரமீ 95, இப்னு மாஜா : 42, அஹ்மது 4 : 126).

புதுமையான காரியங்கள் என்பது, இறைவனது வேதமான திருக்குர்ஆனிலும், இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது சொல், செயல், ஆமோதித்தல் ஆகிய சுன்னத்தி (வழிமுறையி)லும், அனைத்து நபித் தோழர்களின் ஒற்றுமையான கருத்தான, இஸ்லாத்தின் மூன்றாவது ஆதாரமான இஜ்மாவிலும் அறியப்படாத காணக்கிடைக்காத செயலுக்குச் சொல்லப்படும் என்று இமாம் இப்னு மன்ஜூர் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் குறிப்பிடுகிறார்கள். (நூல் : இப்னு மன்ஜூர் பா : 2, பக் : 131)

பித்அத் என்பது நபித்தோழர்களும் அவர்களை பின்பற்றிய தாபியீன்களும் செய்யாத, அது கூடும் என்பதற்கு மார்க்கத்தில் எந்த ஆதாரமும் இல்லாத நவீன செயலாகும் என்பதாக இமாம் அஸ்ஸய்யிது சரீஃப் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகிறார்கள். (நூல் : தஃரிஃபாத், பா : 39, பக் : 27)

இறைவனாலும் இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களாலும், மறுக்கப்பட்டதிற்கும் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அவர்களது தோழர்கள், அவர்களைப் பின்பற்றிய தாபியீன்கள் சொல்லாத, செய்யாத, ஆமோதிக்காத ஒரு விஷயத்தைப் புதுமையாக இஸ்லாத்தில் உண்டாக்குவதே பித்அத் ஆகும்.

மார்க்கத்தில் பித்அத் கூடாது

இன்றைய தினம் உங்களுடைய மார்க்கத்தை உங்களுக்கு நான் பரிபூரணமாக்கி விட்டேன். மேலும், என்னுடைய அருட்கொடையை உங்களின் மீது நிரப்பமாக்கி விட்டேன்.இன்னும், உங்களுக்கு இஸ்லாத்தை (யே நன்) மார்க்கமாக நான் பொருந்திக் கொண்டேன். (அல்குர்ஆன் 5 : 3),

(1) இன்றைய தினம் உங்களது புனித மார்க்கமான இஸ்லாத்தை எல்லா விதச் சட்டதிட்டங்களின் மூலம் பரிபூரணமாக்கிவிட்டேன் என்பதாக

இறைவன் கூறுகின்றான். அதாவது இந்த இஸ்லாமியச் சமுதாயத்திற்கு என்னென்ன கூறவேண்டுமோ,ஏவ வேண்டுமோ, தடுக்க வேண்டுமோ எல்லாவற்றையும் முழுமையாக உங்களுக்கு நான் கூறிவிட்டேன். இதில் எதையும் புதிதாக (பித்அத்) செய்ய வேண்டிய அவசியமில்லை என இவ்வசனத்தில் தெளிவுபடுத்துகின்றான்.

(2) மேலும், தனது அருட்கொடைகளை இந்த இஸ்லாமியச் சமுதாயத்திற்கு நிரப்பமாகக் கொடுத்து, இஸ்லாத்தையே புனித மார்க்கமாகவும் பொருந்திக் கொண்டேன் என்று இறைவன் கூறிய பின், இதில் எந்தவொரு குறையும் இல்லையென்பதும் தெளிவாகிறது.

இறைவன் பரிபூரணமாக்கிவிட்டேன் என்று கூறியபின், யாராவது ஒரு செயலைப் புதிதாக உண்டாக்கினால், அவன் நிச்சயமாக இறைவனது வசனத்திற்கு மாறு செய்தவனாவான் (காஃபிராவான்). எனவே தான்,

நமது மார்க்கத்தில் இல்லாத ஒன்றை யார் புதிதாக உண்டாக்குகிறாரோ, அது (அவரது செயல்) மறுக்கப்பட வேண்டியது. என்பதாக நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். நூல் : புகாரீ 5 : 221, முஸ்லிம்.

எவர் பித்அத்தைத் தோற்றுவிக்கின்றாரோ அல்லது பித்அத்தைத் தோற்றுவிப்பவருக்கு இடமளிக்கின்றாரோ அவர் மீது அல்லாஹ்வுடைய - மலக்குமார்களுடைய மற்றும் அனைத்து மக்களுடைய சாபமும் உண்டாகும். மேலும், அவரிடமிருந்து எந்த ஃபர்ளான - நஃபிலான வணக்கங்களும் ஏற்கப்படுவதில்லை என்பதாக நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள் (நூல் : புகாரீ பா : 2, பக் : 115, எண் : 413).

மேற்கூறப்பட்ட சான்றுகள் அனைத்தும் இறைவனுக்கும் இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி அவர்களின் சுன்னத்திற்கும், மாற்றமான குழப்பவாதிகளாகிய வஹ்ஹாபிகளால் உண்டாக்கப்படும் பித்அத் இஸ்லாத்தில் கூடாது என்பதற்குத் தகுந்த சான்றுகளாகும்.

யார் அந்தக் குழப்பவாதிகள் :

இறைவனுக்கும், இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் மாறு செய்து இஸ்லாத்தையே கூறுபோடும் பித்அத்வாதிகள்

யாரென அறிந்து கொள்க.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும், அவர்களது தோழர்களும், அவர்களை அடுத்துள்ள தாபியீன்கள், தபஅ தாபியீன்கள், இமாம்கள் ஆகிய அனைவரும் எந்த வழிமுறையைப் பின்பற்றினார்களோ, செய்தார்களோ, அதை அப்படியே முழுமையாக பின்பற்றக்கூடிய அஹ்லே சுன்னத் வல் ஜமாஅத் கொள்கையுடையவர் களுக்கு மாற்றமானவர்களே, இஸ்லாத்தில் இல்லாத நவீனத்தை உண்டு பண்ணும் பித்அத்வாதிகள் என்று இமாம் இப்னு ஹஜருல் அஸ்கலானி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் விளக்கம் தருகிறார்கள். (நூல் : ஃபத்ஹுல் பாரி ஷரஹுல் புகாரீ).

இப்னு ஹஜர் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் மட்டும் தானே கூறுகிறார்கள்? பிற இமாம்கள் கூறவில்லையே? இவர்களது சொல்லை நம்பலாமா? எனக் கேட்டால்,

இப்னு ஹஜர் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களது சொல் (கூற்று) கல்லை விடக் கடுமையானது (பலமானது – உறுதியானது) என்று எல்லா இமாம்களாலும் கூறப்பட்டு, கருதப்பட்டு வருகிறது. "கல் உடைந்தாலும், இப்னு ஹஜரின் சொல் உடையாது".

இனி பித்அத்வாதிகளை குர்ஆன், ஹதீஸ் வாயிலாக அறிவோம்.

இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள் : கடைசிக் காலத்தில் சில கூட்டத்தினர் வருவார்கள். அவர்களது முகம் மனிதர்களின் முகம் போன்றும், உள்ளம் ஷைத்தான்களது உள்ளம் போன்றும் இருக்கும். அவர்கள் அருவருப்பான காரியங்களை விட்டும் திரும்பமாட்டார்கள் (தொடர்ந்து செய்வர்). நீ அவர்களைப் பின்பற்றினால் உன்னை ஏமாற்றுவார்கள், அவர்களை விட்டு, பின்னால் சென்றால் (பிரிந்தால்) உன்னைப் பற்றி குறை பேசுவார்கள். உன்னிடத்தில் பேசினால் பொய் (மட்டுமே) பேசுவார்கள். அவர்களை நீ நம்பினால் உனக்கு (இம்மையிலும், மறுமையிலும்) மோசடி செய்வார்கள். அவர்கள் கூட்டத்திலுள்ள சிறுவர்கள் மடையர்கள், வாலிபர்கள், வஞ்சகத்தன்மை கொண்டவர்கள், முதியோர்கள் நல்லதை ஏவவும், தீயதைத் தடுக்கவும் மாட்டார்கள். (குழப்பவாதிகளால்) ஜயசீலனாகக் கருதப்படுபவன் (உண்மையில்) இழிவானவனே. அவர்களிடத்தில் உதவி தேடுவது

வறுமையைத் தரும் (உதவி தேடாதீர்கள்).

அவர்களது கூட்டத்தில் சாந்தமாக இருப்பவன் (துப்லீக் - அமீர்ஷாப்) மிகப்பெரிய வழிகேடனும், துன்மார்க்கனுமாவான். நல்லதை ஏவுபவன் (துப்லீக் - வஹ்ஹாபி) துர்நாற்றம் கொண்டவனாக இருப்பான். அவர்களிடத்தில் உண்மையான முஃமீன்கள் பலகீனமானவர்களாகவும், பெரும்பாபிகள் மேன்மையானவர்களாகவும் கருதப்படுவார்கள்.

மேலும், அக்கூட்டத்தினர் சுன்னத்தை (மவ்லிது, மீலாது, ஜியாரத், ஃபாத்திஹா, தொப்பி அணிதல் போன்றவற்றை) பித்அத்தாகவும், பித்அத்தை (விரல் ஆட்டுதல், ஆண்கள் நெஞ்சில் கை கட்டுதல், தொப்பியின்மை, தொழுகையில் சப்தமாக ஆமீன் கூறுதல், பெண்களை வீதிக்குக் கொண்டுவருதல் போன்றவற்றை) சுன்னத்தாகவும் செயல்பட்டு வருவார்கள் என்பதாக நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (நூல் : தப்ரானீ)

மேற்கண்ட ஹதீது பித்அத்வாதிகளின் அங்க அடையாளத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

கடைசிக் காலத்தில ஒரு கூட்டத்தினர் வருவார்கள், அவர்கள், நீங்களும் உங்களது முன்னோர்களும், கேள்விப்படாத விஷயங்களையெல்லாம் உங்களிடம் சொல்வார்கள். (அவர்களது சொல்லைக் கேட்பதை விட்டும்) உங்களை நான் எச்சரிக்கிறேன். மேலும், (அவர்களது சொல் மூலம் நரகம் அடைவார்களென்று) அவர்களையும் எச்சரிக்கிறேன் என்பதாக நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். (நூல் : முஸ்லிம் பா : 1, பக் : 12, ஷரஹு ஸுன்னா பா : 1, பக் : 223).

காலங்காலமாக தொன்று தொட்டு நம் முன்னோர்கள் முதல், இன்று வரை செய்து வருவது. மீலாது மேடைகள், மவ்லிது மஜ்லிஸ்கள், தர்கா ஸியாரத், உரூஸ் முபாரக், தொப்பி அணிதல், மத்ஹபைப் பின்பற்றுதல், முன்சென்றோரின் பெயரில் குர்ஆன் தமாம் செய்து ஏழைகளுக்கு உணவு வழங்குதல், ரமலான் மாதத்தின் இரவுகளில் 20 ரக்அத் தராவீஹ் தொழுதல், இறைநேசர்களின் மூலம் இறைவனிடத்தில் வஸீலா தேடுதல், நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் போதித்த வஹ்ததுல் வுஜூத் எனும் ஞானத்தைப் பின்பற்றுதல், நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் புனித ரவ்ழா சென்று

தரிசித்தல், அவர்கள் மீது ஸலவாத் கூறுதல் மேலும் இதுபோன்ற நல்லமல்களாகும்.

இவற்றைத் திருக்குர்ஆனின் வழிகாட்டுதலின்படியும், திருத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வாழ்க்கை வழிமுறைகளின்படியும், அனைத்து நபித் தோழர்களது செயல்பாடுகளின் படியும் நமது முன்னோர்கள் அப்படியே பின்பற்றி செய்துவந்து, நமக்கும் கற்றுக் கொடுத்துள்ளார்கள். இன்று வந்த குழப்பவாதிகளான வஹ்ஹாபிகள், இதுவெல்லாம் ஷிர்க், குஃப்ர், பித்அத் என்று காரணமில்லாமலும் உண்மையை உணராமலும் தெரு நாய்கள் போன்று தேவையில்லாமல் ஓலமிடுகின்றனர்.

இன்று வந்து புதிதாக கருத்து கூ(உ)றுவோருக்கு உள்ள அறிவு, ஞானம் நமது முன்னோர்களுக்கு இல்லையா?

எண்ணிறந்த இஸ்லாமிய அறபுக் கலை நூற்களைப் படித்த, படைத்த இமாம்களுக்குத் (எது சரி எது தவறு என்று) தெரியாதா?

இல்லை, இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடமே நேரடியாக இஸ்லாத்தைக் கற்றுக் கொண்ட நபித்தோழர்களுக்குத் தான் தெரியாதா என்ன!

இந்த பித்அத்வாதிகள் கூறுவது வேடிக்கையாகத்தான் இருக்கிறது. அதாவது, 1400 ஆண்டுகளாக இதுவரை அனைவரும் ஷிர்க்கிலும், குஃப்ரிலும் இருந்தார்கள் போலும், இவர்கள் வந்து தான் தௌஹீதை உயிர்ப்பித்தார்கள் போலும் இவர்களது கூற்று (குதர்க்கம்) உள்ளது. நீங்களும் உங்களது முன்னோர்களும் கேள்விப்படாததைக் கூறுபவர்களென்று நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், இவர்களைப் பற்றித்தான் எச்சரித்துக் காட்டினார்கள்.

நற்செயலுக்குப் பயனில்லை :

பித்அத்வாதிகளாகிய வஹ்ஹாபிகளது எந்த விதமான அமல்களும் இறைவனிடத்தில் அங்கீகரிக்கப்படாது. ஏனெனில், குழப்பமெனும் போதையில் வாழ்பவனது அனைத்து செயல்களும் குளறுபடியாகத்தான் இருக்கும்.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள் : பித்அத்வாதிகளின் தொழுகை, நோன்பு, ஹஜ், உம்றா, ஸதகா, ஜிஹாத் (இறைவழியில் போர் புரிதல்), தௌபா (பிழை மன்னிப்பு), நீதமாக நடந்து கொள்ளுதல் போன்றவை (எந்த அமல்)களையும் அல்லாஹ் ஏற்றுக் கொள்வதில்லை. மேலும், அவர்களை விட்டும் ஈமான் வெளியேறிவிடும் (காஃபிர் ஆவார்கள்). (நூல் : இப்னு மாஜா பா : 1, பக் : 19).

பித்அத்வாதி தனது பித்அத்தை விட்டும் நீங்கினால், அவனது நல்லமல்கள் அங்கீகரிக்கப்படுவதற்காக நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இறைவனிடம் துஆ செய்தார்கள். (நூல் : இப்னு மாஜா பா : 1, பக் : 19)

அலீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறுகிறார்கள் :

மூன்று நபர்களது அமல்கள் ஏற்றுக் கொள்ளப்படாது.

(1) இணை வைப்பவன்

(2) இறை நிராகரிப்பு செய்பவன்

(3) தன்சுய கருத்து சொல்பவன்

அமீருல் முஃமினீன் அவர்களே! தன்சுய கருத்து சொல்பவன் என்றால் யார்? எனக் கேட்கப்பட்டது.

அல்லாஹ்வின் வேதமான திருக்குர்ஆனையும், திருத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது ஹதீதையும் விட்டுவிட்டு தன் சுய சிந்தனைப்படி அமல் செய்பவன் என்பதாக கலீபா அலீ ரலியல்லாஹு அன்ஹுஅவர்கள் பதிலளித்தார்கள். (நூல் : ஜாமிவுல் அஹாதீஸ் பா : 15, எண் : 2540, ஆசிரியர் : இமாம் ஸுயூத்தீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள்).

குர்ஆன் ஆயத்தையும், நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஹதீதையும் எடுத்துக் கொண்டு தன் சுய சிந்தனைப்படி பொருளும், விளக்கமும் கொடுப்பது இந்த பித்வாதிகளாகிய வஹ்ஹாபிகளுக்குக் கைவந்த கலையாகும். பின்பு, எப்படி இவர்களது அமல் இறைவனிடத்தில் ஏற்றுக் கொள்ளப்படும் (?).

கூடாதோ, அதைப் போன்று பித்அத்வாதி (வஹ்ஹாபி)களின் பின்னால் தொழுவதும் கூடாது.

மேலும், முக்தஸ்ஸர் எனும்கிதாபில் இமாம் ஷாஃபீ ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் குறிப்பிடுகிறார்கள் :

பெரும்பாபிக்குப் பின்னாலும், பித்அத்வாதிக்குப் பின்னாலும் தொழுவது மக்ரூஹ் (மார்க்கத்தில் வெறுக்கத்தக்கதாகும்). (நூல் : ஷர்கானீ பா : 1, பக் : 246, ஷரஹுல் முஹத்தப் பா : 4, பக்: 253, துஹ்ஃபா பா : 2, பக் : 294).

பெரும்பாபியும், பித்அத்வாதியும் இமாமத் செய்வதற்குத் தகுதியற்றவர்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. (நூல் : நிஹாயா பா : 2, பக் : 186, புஷ்ரா அல்கறீம் பா : 2, பக் : 33, ஷரஹு தஹ்தீப் பா : 1, பக் : 236).

இதய நோயாளிக்கு, சர்க்கரை (Sugar) முழுமையாகக் குறைந்தால், (வெளியேறினால்) தான் ஆபரேஷன் செய்து உயிர் காப்பாற்ற முடியுமென்று மருத்துவர்கள் கூறுவது போன்றும், கிணற்றின் உள்ளே கிடக்கும் பன்றியை வெளியேற்றி விட்டு, நீர் இரைத்தால் தான் கிணறு சுத்தமாகுமென்று ஃபிக்ஹு சட்டம் கூறுவது போன்றும், குழப்பவாதிகளாகிய வஹ்ஹாபிகள் பித்அத்தை முழுமையாக விட்டு, வெளியேறி (சுன்னத்தைப் பின்பற்றி)னால் தான், அவர்களது அமல்கள் கூடுமென்று மார்க்கம் தெளிவுபடுத்துகின்றது.

உதவி செய்வது குற்றம் :

பித்அத்வாதிகளாகிய வஹ்ஹாபிகளிடம் பேசக்கூடாது. பழகக்கூடாது. அவர்களிடம் அமருதல், சாப்பிடுதல், குடித்தல் போன்றவற்றையெல்லாம் இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கிறது.

ஸஹ்லு பின் அப்துல்லாஹ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள். பித்அத்வாதிகளிடம் (வஹ்ஹாபிகளிடம்) இணக்கம் கொள்ளாமல், அவர்களின் சபையில் அமராமல், அவர்களுடன் சாப்பிடாமல், குடிக்காமல், தோழமை கொள்ளாமல், மேலும் தனது கோபத்தையும் எதிர்ப்பையும் அவர்களிடம் வெளிப்படுத்துபவனே... தனது ஈமானைச் சரிசெய்து கொண்டவனும் தனது தௌஹீதைத் தூய்மையாக்கியவனும் ஆவான்.

யார் பித்அத்வாதிகளுடன் முகஸ்துதி கொள்கிறானோ, அவனை விட்டு சுன்னத்தின் இன்பத்தை அல்லாஹ் பறித்து விடுவான். மேலும், யார் பித்அத்வாதிகளுடன் நேசம் கொள்கிறானோ அவனின் உள்ளத்திலிருந்து ஈமானின் ஜோதியை அல்லாஹ் கழற்றி விடுகிறான் என்று நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (நூல் : ரூஹுல் பயான் பா : 9, பக் : 412).

அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள் : யார் பித்அத்வாதிக்கு (வஹ்ஹாபிக்கு)க் கண்ணியம் செய்கிறானோ, அவன் இஸ்லாம் என்னும் புனித மார்க்கத்தை இடித்துத் தரைமட்டமாக்குவதற்கு உதவி செய்தவன் ஆவான் என்று நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (நூல் : தப்ரானீ, அல்ஜாமிவு லிஅஹ்காமில் குர்ஆன் பா : 7, பக் : 13).

இப்னு உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள் : யார் ஒரு கூட்டத்தினருக்கு ஒப்பாகிறாரோ அவர் அக்கூட்டத்தைச் சார்ந்தவராவார் என்று நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். நூல் : அபூதாவூது, தப்ரானீ, மஜ்மவு ஸவாயித் பா : 10, பக்: 271).

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது புகழ்பாடும், மவ்லிதுகளையும், ஸலவாத்தையும் ஓதுக்கூடாது, அவர்களும் நம்மைப் போன்ற மனிதர் தான், அவர்களைப் பின்பற்றத் தேவையில்லை என்று கூறும் பித்அத்வாதி (வஹ்ஹாபி)களிடம் பச்சைத் தண்ணீர் கூட வாங்கி அருந்தாதீர்கள் என்பதாக நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நேரடி 34ஆவது வாரிசான சத்திய நாவாளர், சன்மார்க்கத் தீர்வாளர் இமாம் குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூது அஸ்ஸய்யிது கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

இறைவனுக்குக் கட்டுப்பட்டு, இறைத்தூதருக்கு உட்பட்டு, வாழும் நமக்கு பித்அத்வாதிகள் சகவாசம் கூடாதென இதன் மூலம் தெளிவாகிறது.

அபூஸயீது அல்குத்ரீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்: முதன் முதலில் பெருநாள் தினத்தில் தொழுகைக்கு முன் சொற்பொழிவு (குத்பா) நிகழ்த்தியவர் மர்வான் பின் ஹிகம் ஆவார்.

(அவ்வாறு அவர் சொற்பொழிவு நிகழ்த்திக் கொண்டிருந்தார்). அப்போது அவரை நோக்கி ஒருவர் எழுந்து நின்று, சொற்பொழிவுக்கு முன்பே (பெருநாள் தொழுகை) தொழ வேண்டும் என்று கூறினார்.

அதற்கு மர்வான் "முன்பு நடைபெற்றது கைவிடப்பட்டுவிட்டது. (இப்போது அது நடைமுறையில் இல்லை)" என்று கூறினார். (அப்போது அங்கிருந்த) அபூஸயீத் அல் குத்ரீ ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இதோ இந்த மனிதர் தனது கடமையை நிறைவேற்றி விட்டார். அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூற நான் கேட்டுள்ளேன். உங்களில் ஒருவர் ஒரு தீமையை (மார்க்கத்திற்கு முரணான செயலை)க் கண்டால், அவர் அதைத் தமது கரத்தால் தடுக்கட்டும். முடியாவிட்டால் தமது நாவால் தடுக்கட்டும். அதுவும் முடியாவிட்டால் தமது உள்ளத்தால் அதை வெறுத்து ஒடுக்கட்டும். இந்த (இறுதி) நிலையானது. இறை நம்பிக்கையின் பலவீனமான (கடைசி) நிலையாகும். (நூல் : முஸ்லிம் பா : 1, பக் : 99 எண் : 78).

இது போன்ற குழப்பவாதிகளின் கூட்டத்தை வெறுத்து (நடக்க விடாமல்) தடுக்காவிட்டாலும், கலந்து கொள்ளாமல் இருப்பதே மேன்மையென மேற்கூறப்பட்ட ஹதீதின் மூலம் தெளிவாகிறது. (நூல் : ஃபத்ஹுல் பயான் பா : 4, பக் : 165, தஃப்ஸீர் இப்னு கஸீர் பா : 2, பக் : 144).

ஸலாம் கூறக்கூடாது :

மேலும், பித்அத்வாதி (வஹ்ஹாபி)களை நலம் விசாரிப்பது மக்ரூஹ் என்றும் கூறப்பட்டுள்ளது. (நூல்: கல்யூபீ பா : 1, பக் : 320).

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அறிவிக்கிறார்கள். இந்தச் சமுதாயத்தில் குழப்பவாதிகளும் மனோ இச்சையைப் பின்பற்றுபவர்களும் தோன்றுவார்கள். அந்நேரத்தில் எனது சுன்னத்தைப் பின்பற்றுவதுதான் வெற்றியின் வழியாகும். பித்அத் செய்வதை விட்டும் குழப்பவாதி (வஹ்ஹாபி)கள் நீங்காத வரை அவர்களுக்கு நீங்கள் ஸலாம் கூறவும் வேண்டாம். (அவர்களது) ஸலாத்திற்குப் பதில் கூறவும் வேண்டாம் என்பதாக நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். நூல் : ஷரஹு ஸுன்னா பா : 1, பக் : 224).

தன்மன இச்சையைப் பின்பற்றுவர் (வஹ்ஹாபி)களே மிகக் கெட்ட

கூட்டத்தினர். அவர்களுக்கு நாம் ஸலாம் கூறத் தேவையில்லை என்பதாக இமாம் மாலிக் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறுகிறார்கள். (நூல் :ஷரஹு ஸுன்னா பா : 1, பக் : 229).

நீ யார் என்று அறிந்த, அறியாத முஸ்லிமுக்கு ஸலாம் கூறுவது இஸ்லாத்தில் சிறந்த அமலாகும் என்று நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறிய ஹதீது புகாரீ, முஸ்லிம் போன்ற கிரந்தங்களில் இடம் பெற்றிருக்க, குழப்பவாதி (வஹ்ஹாபி)களுக்கு ஸலாம் கூறக்கூடாது என்று அறிவிக்கும் மேற்கூறப்பட்ட சான்றுகள் முறையானதா? சரியானதா? என்று நீங்கள் கேட்கலாம்!

ஈமான் இழந்தவர்கள் :

புகாரீ, முஸ்லிம் கிதாபுகளில் இடம் பெற்றிருக்கும் ஹதீது, முஃமீனுக்கு மட்டும் ஸலாம் கூறச் சொல்கிறது. அப்படியானால், இந்தக் குழப்பவாதிகளாகிய வஹ்ஹாபிகள் முஸ்லிம் – முஃமீன்கள் இல்லை எனும் மறைமுகக் கருத்தை, "ஸலாம் கூறக் கூடாது" எனும் கட்டளையின் மூலம் தெளிவுபடுத்துகிறது.

சரி, மறைமுகக் கருத்து போகட்டும். மறை (குர்ஆன்) கூறும் கருத்தை இனி கவனிப்போம் :

கத்தி எடுத்தவனெல்லாம் கசாப்பு கடைக்காரன் போல், மைக் பிடித்தவர்களெல்லாம் மார்க்க அறிஞர்களாக மாறிவிட்டார்கள். குழப்பவாதிகளின் வலையில் சிக்கியவர்கள் பெரும்பாலும் இளைஞர்களாகத்தான் இருக்கிறார்கள். தெருக்குத் தெரு மேடை, வசீகரமான ஆடை, அப்படியே ஷைத்தானின் ஜாடை. பேச்சின் இடையில் குர்ஆன் ஆயத்தும், ஹதீதும் கூறி, பொருள் மட்டும் மாற்றி, பொய்யான விளக்கங்களை வாரி பேசுவது தான் இவர்களது குலத்தொழில், இதனால் தனது ஈமான் இழந்ததுதான் மிச்சம்.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள் : கடைசிக் காலத்தில் ஒரு கூட்டத்தினர் வருவார்கள். அவர்கள் வயது குறைந்தவர் (இளைஞர்)களாகவும், (மார்க்க விஷயத்தில்) அறிவு தெளிவு பெறாதவர்களாகவும் இருப்பார்கள். மேலும், எனது சொல்லை (ஹதீதை) எடுத்துப் பேசுவார்கள். எனினும், அவர்களது ஈமான் அவர்களது

தொண்டையைக் கடக்காது, ஈட்டியை விட்டு அம்பு வெளியேறுவது போல், மார்க்கத்தைவிட்டு அவர்கள் வெளியேறிவிடுவார்கள். அவர்களை நீங்கள் எங்கு சந்தித்தாலும் வெட்டுங்கள், அவர்களை (பித்அத்வாதிகளை) கொலை செய்ததற்கான நற்கூலி நிச்சயமாக மறுமையில் கிடைக்கும். (நூல்: புகாரீ 3611, முஸ்லிம் 342, திர்மிதீ, அஹ்மது, இப்னு மாஜா).

சிறு வயதுடைய இளைஞர்களாகத்தான் அந்தக் குழப்பவாதிகள் இருப்பார்கள். மேலும், அவர்கள் முஸ்லிம்கள் அல்ல, அவர்களை விட்டும் ஈமான் வெளியேறி விடும். அவர்களைக் கண்ட இடத்தில் கொலை செய்பவருக்கு நற்கூலி கிடைக்குமென இந்த ஹதீது தெளிவுபடுத்துகிறது.

சில முகங்கள் வெண்மையாகவும், (பிரகாசமாகவும்), இன்னும் சில முகங்கள் கருமையாகவும் ஆகிவிடும் நாளில் எவர்களுடைய முகங்கள் கருத்து விட்டனவோ அவர்களிடம் நீங்கள் ஈமான் கொண்டபின் நிராகரிப்பாளர்களாக ஆனீர்களா? அப்படியானால், நிராகரித்துக் கொண்டிருந்ததற்காக வேதனையைச் சுவையுங்கள். (என்று கூறப்படும்). (அல்குர்ஆன் 3 : 106).

இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் இந்த ஆயத்தை ஓதி, இதில் வரும் கருத்த முகத்துடையவர்கள். பித்அத்வாதிகள் என்று விளக்கம் தருகிறார்கள். (நூல் : தஃப்ஸீர் காஸீன் பா : 1, பக் : 369, தஃப்ஸீர் கபீர் பா : 8, பக் : 188, தஃப்ஸீர் இப்னு கஸீர் பா : 1, பக் : 300).

நிச்சயமாக எவர்கள் தங்களுடைய மார்க்கத்தைப் (பலவாறு) பிரித்து, பல பிரிவினர்களாகி விட்டனரோ, அவர்களின் எந்தக் காரியத்திலும் நீர் இல்லை. அவர்களுடைய காரியங்கள் அல்லாஹ்வின்பால் உள்ளதாகும். பின்னர், அவர்கள் செய்து கொண்டிருந்தவற்றை (மறுமையில்) அவர்களுக்கு அவன் அறிவிப்பான். (அல்குர்ஆன் 6:160).

அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள் : எவன் ஒருவன் முஸ்லிம் சமுதாய அமைப்பை (ஜமாஅத்தை) விட்டு வெளியேறி, ஏதாவது ஒரு கொடியின் (அமைப்பின்) கீழ் இருந்து கொண்டு, முஸ்லிம் சமுதாய மக்களிடம் சண்டையிட்டு அந்த நிலையிலேயே அவன் மரணித்து விட்டால், அவனது மரணம் துர் மரணமாகும். அவனுக்கும், எனக்கும் எந்த ஒட்டும் உறவும் இல்லை என்பதாக நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (நூல் :

முஸ்லிம்).

அல்லாஹ் - ரஸுல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் சொல்படி வாழ்ந்த நபித்தோழர்களையும், இமாம்களையும் பின்பற்றி இஸ்லாத்தில் ஒற்றுமையாகவும், ஒரே ஜமாஅத்தாகவும், மனநிறைவுடன் முஸ்லிம்கள் வாழ்ந்து வந்தனர்.

ஸஹாபாக்கள் தேவையில்லை; இமாம்கள் தேவையில்லை; மத்ஹபுகள் தேவையில்லை ; ஸியாரத் தேவையில்லை என இஸ்லாத்தில் பிரிவினை ஏற்படுத்தி, தங்களுக்கென ஒரு கூட்டத்தையும், ஒரு கொடியையும், கொள்கையும் வகுத்து உண்மையான சுன்னத் வல் ஜமாஅத் முஃமீன்களிடம் கொள்கைரீதியாகச் சண்டை போடுவது இந்த பித்அத்வாதிகளாகிய வஹ்ஹாபிகள் தான் என்பதில் சந்தேகம் இல்லை.

அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள் : இஸ்லாத்தில் பிரிவினை ஏற்படுத்தியது பித்அத்வாதி (வஹ்ஹாபி)களும், தன் மன இச்சைப்படி செயல்படுபவர்களும், வழிகேடர்களும் தாம் என்பதாக நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். (நூல் : தஃப்ஸீர் இப்னு கஸீர் பா : 1, பக் : 196, தஃப்ஸீர் ராஸி பா : 14, பக் : 9, மஆலிமுல் தன்ஸீல் பா : 2, பக் : 445).

மேலும், உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள் : ஆயிஷாவே! மார்க்கத்தில் பிரிவினை ஏற்படுத்தியது பித்அத்வாதி (வஹ்ஹாபி)களும், மன இச்சையைப் பின்பற்றுபவர்களும் தான். நிச்சயமாக அவர்களுக்கு மன்னிப்பே கிடையாது. மேலும், அவர்கள் என்னை விட்டும் நீங்கியவர்கள் என்பதாக நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்களிடம் கூறினார்கள். (நூல் : தப்ரானீ, பைஹகீ, ஃபத்ஹுல் பயான் பா : 4, பக்கம் : 289).

மேற்கூறப்பட்ட வசனங்களும், இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது கூற்றும் பித்அத்வாதிகளாகிய வஹ்ஹாபிகள் முஸ்லிம்களல்ல. அவர்களை விட்டும் ஈமான் வெளியேறிவிட்டது என்று தெளிவாக்குகின்றன.

நரகவாதிகள் :

இறைவனுக்கும், இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும் மாறு செய்து, இஸ்லாத்தில் இல்லாத பல புதுமை (பித்அத்)களை உண்டு பண்ணி, இஸ்லாத்தை விட்டு, முழுமையாக வெளியேறி பெயரளவில் மட்டும் முஸ்லிம்களாக வாழும் வஹ்ஹாபிகளுக்கு ஒதுங்குமிடம் நரகம்தான்.

நிந்திக்கப்பட்டவனாகவும், விரட்டப்பட்டவனாகவும் இங்கிருந்து நீ வெளியேறிவிடு; அவர்களிலிருந்து எவர் உன்னைப் பின்பற்றுகிறாரோ (அவருடன்) உங்கள் அனைவரிலிருந்தும் நரகத்தைத் திண்ணமாக நான் நிரப்புவேன் என்பதாக அல்லாஹ் கூறினான். (அல்குர்ஆன் 7 : 18).

இவ்வசனம் ஷைத்தானைப் பார்த்து இறைவன் கூறியதாகும்.

இமாம் பக்ருத்தீன் ராஜி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் இவ்வசனத்திற்குப் பின்வருமாறு விளக்கம் தருகிறார்கள். ஷைத்தானைக் குறிப்பிடும் இவ்வசனம் பித்அத்வாதி (வஹ்ஹாபி)களையும், வழிகேடர்களையும் (சுன்னத்தை விட்டவன்) அறிவிக்கிறது. ஏனெனில், இவர்கள் இருவரும் ஷைத்தானைப் பின்பற்றுபவர் (வழிப்படுபவர்)கள் ஆவர். (நூல் : தஃப்ஸீர் ராஸீ பா : 14, பக் : 47).

“மின் ஷர்ரில் வஸ்வாஸ்” (வீண் சந்தேகங்களைக் கிளப்பக்கூடியவ (னான ஷைத்தா)னின் தீங்கை விட்டும் நான் பாதுகாவல் தேடுகிறேன் 114 : 04) என்ற வசனத்திற்குப் பின்வருமாறு தஃப்ஸீர் ரூஹுல் பயானில் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

ஷைத்தானுக்கு பாபங்களில் மிகப் பிரியமானது பித்அத் (மார்க்கத்தில் இல்லாததை நவீனமாக உண்டாக்குவது) ஆகும். ஏனெனில், எல்லாப் பாபங்களுக்கும் இறைவனிடத்தில் மன்னிப்பு உண்டு. அதன் மூலம் அப்பாபங்கள் இல்லாமல் போகிவிடும். ஆனால், பித்அத்வாதி (வஹ்ஹாபி) தான் இருப்பதுதான் சரியான பாதை என்ற எண்ணத்தில் இருப்பதால் அவனுக்கு மன்னிப்பே கிடையாது (நரகம்தான்). (நூல் : தஃப்ஸீர் ரூஹுல் பயான் பா : 10, பக் : 548, தஃப்ஸீர் குர்தூபீ பா : 7, பக் : 140, ஷரஹு ஹுன்னா பா : 1, பக் :216).

அபூ உமாமா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள் :

பித்அத்வாதி (வஹ்ஹாபி)கள் அனைவரும் நரகத்தின் நாய்கள் என்று நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். (நூல் : சவாஇகுல் முஹ்ரகா : 4).

பிஷ்ஸ் பின் ஹகீம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள் : சொற்பொழிவைக் கேட்டு கூட்டத்தினர் சிரிப்பதற்காக யார் (எனது) ஹதீதைக் கொண்டு பேசுகிறானோ, அவன் பொய் சொல்கிறான். வைல் என்ற நரகம் அவனுக்கு உண்டு; வைல் நரகம் அவனுக்கு உண்டு; வைல் நரகம் அவனுக்கு உண்டு என்பதாக நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (நூல் : திர்மிதி).

தனது பேச்சை மக்கள் இரசிக்க வேண்டும், சிரிக்க வேண்டுமென்று நபிகளார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வாக்கியத்தைக் கேலிக்கூத்தாக்கி அதில் குளிர்காய்கின்றனர், இந்த வஹ்ஹாபி நாய்கள். எனவே தான், பிற நரகங்களும் கண்டு நடுங்கும் வைல் என்ற நரகத்தை நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அவர்களுக்குண்டு என்பதாக எச்சரித்துள்ளார்கள்.

நரகத்தில் வாழ்பவர்கள் என்று குறிப்பிடப்பட்ட குழப்பவாதி (வஹ்ஹாபி)களிடம், பித்அத்தை விட்டுவிட்டு நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது சுன்னத்தைப் பின்பற்றுவதின் மூலம் நேர்வழி பெறுங்கள் என்று கூறினால், அவர்கள் கூறும் பதிலை இறைவனே தன் திருமறையில் குறிப்பிடுகிறான்.

பூமியில் நீங்கள் குழப்பத்தை உண்டாக்காதீர்கள் என்று அவர்களிடம் சொல்லப்பட்டால், நிச்சயமாக நாங்கள் சமாதானவாதிகளே என்று அவர்கள் (பதில்) சொல்கிறார்கள். (அல்குர்ஆன் 2 : 11).

அறிந்து கொள்ளுங்கள்! நிச்சயமாக அவர்கள் (நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கொணர்ந்ததை ஏற்காதவர்கள்) தாம் குழப்பவாதிகள். எனினும் அவர்கள் (இதை) உணர மாட்டார்கள். (அல்குர்ஆன் 2 : 12).

அவர்கள் எத்தகையவர்கள் என்றால் நேர்வழிக்குப் பதிலாகத் தவறான வழியைக் கொள்முதல் செய்து கொண்டார்கள். எனவே, இவர்களுடைய (இந்த) வியாபாரம் இலாபம் தரவில்லை. மேலும், இவர்கள் நேர்வழி

பெற்றவர்களாகவுமில்லை. (அல்குர்ஆன் 2 : 16).

மேற்கூறப்பட்ட வசனங்கள் குழப்பவாதிகளைப் பற்றி எச்சரிக்கின்றன. இத்தகையோரிடம் அகப்படாமல் நமது ஈமானைப் பாதுகாத்துக் கொள்வது இக்காலத்தில் அவசியத்திலும் அவசியமாகும்.

ஆயினும், அவர்கள் தங்கள் (பாபச்) சுமைகளுடன் தாங்கள் பிறரை வழிகெடுத்த பாபச் சுமையையும் நிச்சயமாகச் சுமப்பார்கள். மேலும், அவர்கள் (இவ்வாறு) பொய்யாகக் கற்பனை செய்து கூறிக் கொண்டிருந்ததைப் பற்றியும் நிச்சயமாக (அவர்களிம்) மறுமையில் கேட்கப்படும். (அல்குர்ஆன் 29 : 13).

தங்களின் பாபச் சுமைகளையும், தங்களுக்கு வழிப்பட்டவர்களுடைய பாபச் சுமைகளையும் அவர்கள் (குழப்பவாதி வஹ்ஹாபிகள்) சுமப்பார்கள். எனினும், இவர்களைப் பின்பற்றுபவர்களுக்குக் கிடைக்கும் வேதனையில் கொஞ்சமும் குறைக்கப்படாது என்பதாக இமாம் இப்னு கஸீர் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் இவ்வசனத்திற்கு விளக்கம் கூறியுள்ளார்கள். (நூல் : தஃப்ஸீர் குர்ஆனில் அளீம் பா : 2, பக் : 547).

இறைவனுக்கு உருவமுண்டு, அவன் பொய் கூறவும் வாய்ப்புண்டு, இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் புகழ அவசியமில்லை. நபித் தோழர்களையும் இமாம்களையும் பின்பற்றத் தேவையில்லை, இறைநேசர்களது புனித மண்ணறை சென்று ஸியாரத் செய்வதும், அவர்களின் பெயரில் வஸீலா தேடுவதும் கூடாது என பொய்யாகக் கற்பனை செய்து கூறிக் கொண்டிருக்கும் நரகவாதி வஹ்ஹாபிகளைப் பற்றிய எச்சரிக்கைகள் தாம் இவைகளனைத்தும். ஆக, பித்அத்வாதிகளாகிய வஹ்ஹாபிகள் நரகவாதிகள் என்று தெளிவான பின், அவர்களுடன் இறைநம்பிக்கையாளர்களுக்கு இன்னும் என்ன சகவாசம்? (பேச்சு வார்த்தையைக் கைவிடுவோம்).

பித்அத்தின் வகைகள் :

பித்அத் ஐந்து வகைப்படும் என்று இமாம் நவவீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள், இஸ்ஸுத்தீன் இப்னு அப்துஸ்ஸலாம் அவர்கள் கவாயித் என்ற நூலில் கூறியதை எடுத்துக் கூறுகிறார்கள். (நூல் : தஹ்தீபுல் அஸ்மா வல்லுகாத் பா : 3, பக் : 22).

1. வாஜிபான பித்அத் (கட்டாயக் கடமை) :

இறைமொழியையும், இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது மொழியையும் அறிவதற்குத் தேவையான அறபு இலக்கண நூற்கள், உஸுல் ஃபிக்ஹு, உஸுல் ஹதீது படைத்தல்.

குர்ஆனிற்கு மொழியாக்கம் செய்தல், ஜேர் - ஜபர் - பேஷ் இடல், தற்போதுள்ள முறையில் குர்ஆனை ஒன்று சேர்த்தல், நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் காலத்தில் இல்லாத புகாரீ - முஸ்லிம் போன்ற நபிமொழித் தொகுப்பு நூற்கள் போன்ற புதுமைகளை ஏற்படுத்துதல்.

2. ஹராமான பித்அத் (தடுக்கப்பட்டது) :

வழிகேட்ட, தவறான கொள்கைகளைக் கொண்ட கவாரிஜா, ரவாஃபிளா, ஜபரிய்யா (கத்ரிய்யா, வஹ்ஹாபிய்யா) போன்றோர்களது செயல்பாடுகள்.

3. மக்ரூஹான பித்அத் (வெறுக்கப்பட்டது) :

பள்ளிவாசல்களைப் பெருமைக்காக, தேவையில்லாமல் (குளிர்சாதன வசதியுடன்) அழகுப்படுத்துதல்.

4. மன்தூபான பித்அத் (சுன்னத்தானவைகள்) :

மதுரஸாக்கள், பாடசாலைகள், தவச்சாலைகள் போன்றவைகள் உண்டாக்குதல், தராவீஹ் தொழுகை ஜமாஅத்துடன் தொழுதல், முற்காலத்தில் இல்லாத நன்மையான காரியங்களை உண்டாக்குதல்.

5. முபாஹான பித்அத் (ஆகுமாக்கப்பட்டது) :

சுப்ஹு, அஸர் தொழுகைக்குப் பின்பு முஸாபாஹா செய்தல், உணவிலும் குடிப்பிலும் இன்பகரமானவற்றை அதிகப்படுத்திக் கொள்ளுதல். (நூல் : ஃபத்ஹுல் முயீன் பா : 1, பக் : 271, மிர்காத் ஷரஹு மிஷ்காத்.

நாம் யார்?

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எதைக் கற்றுக் கொடுத்தார்களோ, அதை அப்படியே அடிபிறழாமல் பின்பற்றுவதில்

தான் இறை நம்பிக்கை கொண்டோர்களுக்கு ஜெயமுண்டு.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் கூறியுள்ளார்கள் : பனூ இஸ்ராயீல் சமுதாயம் 72 கூட்டங்களாகப் பிரிந்தன. என்னுடைய சமுதாயம் 73 கூட்டங்களாகப் பிரியும். அதில் ஒரு கூட்டத்தினரைத் தவிர மற்ற அனைத்துக் கூட்டமும் நரகவாதிகள் தான். நாயகமே! யார் அந்த ஒரு கூட்டத்தினர்? என நபித் தோழர்கள் கேட்க, நானும் எனது தோழர்களும் எதில் இருக்கின்றோமோ எதைப் பின்பற்றும் கூட்டத்தினர் (சொர்க்கவாதிகள் என்பதாக நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (நூல் : அபூதாவூது : 4597, திர்மிதீ : 2779, அஹ்மது பா : 4. பக் : 102).

மேற்கூறப்பட்ட ஹதீதை நன்றாகக் கவனித்தால், நமக்கு ஓர் உண்மை தெளிவாகிறது. அதாவது, நானும் எனது தோழர்களும் என்று அந்த ஹதீதில் வாசகமிடப்பட்டுள்ளது. (நான் – நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், எனது தோழர்கள் – அனைத்து ஸஹாபாக்கள்).

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது சொல், செயல், ஆமோதித்தல் ஆகியவற்றை சுன்னத் என்றும், நபித்தோழர்களது சொல், செயல், ஆமோதித்தல் (ஒற்றுமையான கருத்து) ஆகியவற்றை ஜமாஅத் என்றும் எல்லாக் கலை வல்லுனர்களாலும் இமாம்களாலும் புளங்கப்பட்டு வருகின்றது.

நானும் எனது தோழர்களும் என்று கூறப்பட்ட ஹதீதின் கருத்து சுன்னத் வல் ஜமாஅத் கொள்கை கொண்டோர்கள் தாம் என்பது வெள்ளிடைமலையாகும்.

இமாம் அபூ லைஸ் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் அறிவிக்கிறார்கள் : நாயகமே! யார் அந்த ஒரு கூட்டத்தினர்? என்று நபித்தோழர்கள் கேட்க, நானும் எனது தோழர்களும் என்ற வாசகத்திற்குப் பதிலாக அஹ்லே சுன்னத் வல் ஜமாஅத் கூட்டத்தினர் என்பதாக நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக, இமாம் அபூலைஸ் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் குறிப்பிடுகிறார்கள். (நூல் : தன்பீஹுல் காபிலீன் : 260, ஃபைலுல் கதீர் பா : 2, பக் : 20).

மேலும், அந்த (சொர்க்கம் செல்லும்) கூட்டத்தினர் பெரும்பான்மையானவர்களாக இருப்பார்கள் என்று நபிகள் நாயகம்

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். (நூல் : அபூதாவூது எண் : 4580, பக் : 42, அறிவிப்பாளர் : முஆவியா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்.

உலகில் வாழும் முஸ்லிம்களின் கொள்கை சம்பந்தமாக 2013ஆம் ஆண்டு ஆய்வு நடத்தப்பட்டது. அதில்,

ஸுன்னத் வல் ஜமாஅத்	:	**64%**
ஷியாக்கள்	:	**12%**
வஹ்ஹாபி, ஸலஃபி	:	**22%**
இபாதி	:	**2%**

குர்ஆனிலுள்ள 6666 வசனங்களின் ஒட்டுமொத்த பயனும், கருத்தும், ஸூரத்துல் ஃபாத்திஹா உள்ளடக்கியுள்ளது என்பதாக நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியுள்ளார்கள். அப்படிப்பட்ட ஸூராவில் பித்அத்வாதிகளை விட்டும் பாதுகாப்புடன் இருக்குமாறு இறைவன் எச்சரிக்கிறான்.

உன் கோபத்திற்குள்ளானோர் வழியுமில்லை. நேர்வழி தவறியோர் வழியுமில்லை (அல்குர்ஆன் 1: 07).

அனுதினமும் அனைவராலும் ஓதப்படுகின்ற ஃபாத்திஹா ஸூராவில் மேற்கூறப்பட்ட இரண்டு வகையானவர்களின் வழியை விட்டும், இறைவன் நம்மைக் காத்தருள துஆச் செய்வோமாக! அதாவது, இறைவனின் கோபத்திற்குண்டானவன், பித்அத்தைப் பின்பற்றுபவன் என்றும், நேர்வழி தவறியவன் சுன்னத்தை விட்டவன் என்றும் இமாம் குர்தூபீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் விளக்கம் தருகிறார்கள். (நூல் : அல்ஜாமிவு லிஅஹ்காமில் குர்ஆன், பா : 1, பக்கம் : 50).

இவர்களது வழியை விட்டும் தவிர்ந்து, நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது சுன்னத்தைப் பின்பற்றி உயர்ந்து வாழ்வோமாக!

அன்பார்ந்த இஸ்லாமியச் சகோதர, சகோதரிகளே! இறைவனுக்கு முழுமையாகக் கட்டுப்பட்டு, இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது வழிமுறைக்கு உட்பட்டு, சுன்னத்தைப் பேணவும், வஹ்ஹாபிகளின் குழப்பங்களிற் சிக்காமல் எவையெவை சுன்னத் – பித்அத்? என்பதை அறிந்து தெளியவும் – அதைக்கொண்டு அவர்களது புனித வதனத்தைக் காணவும் பரிபூரணமான முஃமினாக வாழவும் எல்லாம் வல்ல இறைவன் நம்மனைவருக்கும் அருள் புரிவானாக! ஆமீன்!!

தொகுப்பு :
தாலிபுல் கலீல். மௌலவி.ஏ.ஹகீம் பாஷா
ஆலிம் யாஸீனிய் ஹக்கிய்யுல் காதிரிய்